
**ஏப்ரல் – 02**

# TNPSC துளிகள்

- உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதியன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள 12,481 கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளால் நடத்தப்பட்ட கிராம சபைக் கூட்டங்களில் 21.7 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.
- ஓலா மற்றும் ஊபர் போன்ற வாடகை வாகன சேவை மாதிரி வழியில் உருவாக்கப்பட்ட 'சஹ்கார்' என்ற புதிய செயலி அடிப்படையிலான ஒரு வாடகை வாகனச் சேவையைத் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழுவின் (FATF) 2025 ஆம் ஆண்டு தனியார் துறைக் கூட்டுறவு மன்றம் (PSCF) ஆனது மும்பை நகரில் நடைபெற்றது.
- நிபுணர்களின் வழிகாட்டுதல் மற்றும் திறன் மேம்பாடு மூலம் இந்தியாவின் வளர்ந்து வரும் உயிரி தொழில்நுட்பம் சார் புத்தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான பயோசார்த்தி வழிகாட்டுதல் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, அதன் 2004 ஆம் ஆண்டிற்கான மனநலக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் சேவை வழிகாட்டுதல் தொகுப்பிற்குப் பதிலாக, உலக நாடுகள் மனநலச் சேவை வழங்கீட்டு அமைப்புகளை மேம்படுத்துவதற்கான மிகத் தெளிவான ஒரு வழிமுறையை வழங்குகின்ற, மனநலக் கொள்கை மற்றும் உத்தி சார் செயல் திட்டங்கள் குறித்த புதிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சடலத்திற்கான மரியாதை செலுத்துதல் சட்டம்




- ஐந்தாவது தமிழ்நாடு காவல் துறை ஆணையம் ஆனது, நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்க உயிரிழந்தவர்களின் உடல்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக 'தமிழ்நாடு சடலத்திற்கான மரியாதை செலுத்துதல் சட்டம்' இயற்றப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.
- இது சாலைகளிலோ அல்லது பொது இடங்களிலோ சடலங்களுடன் இறந்தவர்களின் உறவினர்கள் அல்லது ஆதரவாளர்கள் இழப்பீடு அல்லது காவல்துறையின் உடனடி நடவடிக்கை கோரி நடத்தும் போராட்டங்களை தடை செய்யும்.

- இது போன்ற எந்தவொரு செயலும் தண்டனைக்குரிய குற்றமாக மாற்றப்பட்டு, ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- ஏற்கனவே ராஜஸ்தான் மாநில அரசு 2023 ஆம் ஆண்டில் சடலத்திற்கான மரியாதை செலுத்துதல் சட்டத்தை இயற்றியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## Dx-EDGE முன்னெடுப்பு





- நிதி ஆயோக் அமைப்பின் NITI எல்லைப்புறத் தொழில்நுட்ப நிதி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபை (AICTE) மற்றும் இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்புடன் (CII) இணைந்து Dx-EDGE முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களில் (MSME) எண்ணிம மாற்றத்தை ஏற்பதற்கான ஒரு தேசிய அளவிலான முன்னெடுப்பு ஆகும்.
- Dx-EDGE ஆனது, மிக அதிநவீனத் தொழில்நுட்பம் மற்றும் எண்ணிமத் திறன்களுக்கான அணுகலை வழங்குகிறது.
- நாடு முழுவதும் புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டை பொதுமைப்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.


## சமூகப் பாதுகாப்புத் திட்டப் பரவலெல்லை

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது, சமீபத்தில் தனது சமீபத்திய உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கையை (WSPR) வெளியிட்டுள்ளது.
- இந்தியா தனது சமூகப் பாதுகாப்புப் பரவலை விரிவுபடுத்துவதில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது என்பதோடு 2021 ஆம் ஆண்டில் 24.4% ஆக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 48.8% ஆக இரட்டிப்பாகியுள்ளது.
- சுமார் 920 மில்லியன் மக்கள், அல்லது மக்கள் தொகையில் சுமார் 65% பேர், தற்போது மிகக் குறைந்த பட்சம் ஒரு வகையான சமூகப் பாதுகாப்பு வசதியின் கீழ் நன்கு பயன் பெறுகின்றனர்.

- அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவு செய்வதற்காக வேண்டி 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த eShram இணைய தளத்தில், மொத்த எண்ணிக்கையில் 53.68% பெண்களின் பங்குடன் 30.68 கோடி பதிவுகள் பதிவாகியுள்ளது.
- 7.25 கோடி மக்கள் பதிவு செய்துள்ள அடல் ஓய்வூதியத் திட்டம் ஆனது, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மொத்தமாக 43,369.98 கோடி ரூபாய் நிதி திரட்டியுள்ளது.





## 10,000 காசநோய் மரபணு மாதிரிகள்




- உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT) ஆனது, மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸ் எனப்படும் காசநோயின் 32,500 மரபணு மாதிரிகளின் இலக்கில் மூன்றில் ஒரு பங்கு அல்லது 10,000 மாதிரிகளின் மரபணு வரிசையாக்க செயல்முறையை நிறைவு செய்து உள்ளது.
- இது மருந்து எதிர்ப்பு திறன் கொண்ட காசநோய் பற்றிய பெரும் புரிதலை மிக நன்கு மேம்படுத்துவதையும், இந்தியாவில் காசநோய் உண்டாக்கும் பாக்டீரியாவின் பெரும் தனித்துவமான மரபணு அம்சங்களைப் பதிவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- வரிசையாக்கப்பட்ட மாதிரிகளில், 7% ஆனது ஒற்றை மருந்திற்கான எதிர்ப்புத் திறன் கொண்டதாகக் கூறப்படுகிறது.
- மரபணு வரிசையாக்க முன்னெடுப்பு ஆனது, 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட "Dare2eraD TB" எனப்படும் ஒரு முதன்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கு சுமார் 1,990 பாதிப்புகள் பதிவாகி உள்ளன என்ற நிலையில் இது 2015 ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கு சுமார் 2,370 ஆக இருந்தது.
- உலகளவில் பதிவான புதிய காசநோய்ப் பாதிப்புகளில் இந்தியாவின் பங்கு சுமார் 28% ஆகும்.

## இந்தியா-ஆப்பிரிக்கா இடையிலான பயிற்சி




- கண்டம் மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துடன் (IOR) பெரும் துணிச்சல் மிகு ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை இந்தியக் கடற்படை அறிவித்துள்ளது.
- இதில் 'AIKEYME' என்றும் அழைக்கப்படுகின்ற 'ஆப்பிரிக்க இந்திய முக்கியக் கடல்சார் நடவடிக்கை' என்ற தலைப்பிலான ஒரு பெரிய அளவிலான பன்னாட்டுப் பயிற்சியும் அடங்கும்.
- இது 10 ஆப்பிரிக்க நாடுகளுடன் நடத்தப்படும்.
- INS சுனைனா என்ற கப்பலானது, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் தென்மேற்கு பகுதியில் இந்தியா மற்றும் ஒன்பது வெளிநாட்டு நட்பு நாடுகளின் (FFC) மிக நன்கு

ஒருங்கிணைந்தக் கப்பல் குழுவுடன் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

- இந்த FFC குழுவில் கொமரோஸ், கென்யா, மடகாஸ்கர், மாலத்தீவுகள், மொரீஷியஸ், மொசாம்பிக், செஷெல்ஸ், இலங்கை மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய சில நாடுகள் அடங்கும்.

## SSA திட்டம் தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு

- PM Shri என்ற திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடாத சில மாநிலங்களுக்கு SSA நிதி வெளியிடப்படாதது குறித்து இக்குழு சிறப்புக் கவனத்தினை செலுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், அந்த மாநிலங்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள மொத்த நிதியானது, மேற்கு வங்காளத்திற்கு 1,000 கோடி ரூபாய்க்கும் அதிகமாகவும், கேரளாவிற்கு 859.63 கோடி ரூபாயாகவும், தமிழ்நாட்டிற்கு 2,152 கோடி கோடி ரூபாயாகவும் உள்ளது.
- சமக்ர சிக்சா அபியான் (SSA) என்ற திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள நிதியை வழங்க பாராளுமன்ற நிலைக் குழுவானது பரிந்துரைத்துள்ளது.
- PM SHRI என்பது தேசியக் கல்விக் கொள்கையின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரி பள்ளித் திட்டமாகும் என்பதோடு. SSA என்பது NEP இலக்குகளை அடைவதற்கான ஒரு திட்டமாகும்.
- 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆனது, 33 PM SHRI பள்ளிகளை நிறுவச் செய்வதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இந்தத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றன.
- 2024-25 ஆம் நிதியாண்டில், மத்திய அரசு ஆனது 2,152 கோடி ரூபாய் வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன், தமிழ்நாடு SSA திட்டத்திற்கு 3,586 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரியனுக்கு அண்மையில் பார்க்கர் சூரிய ஆய்வுக் கலம்

- நாசாவின் பார்க்கர் சூரிய ஆய்வுக் கலமானது, சமீபத்தில் சூரியனின்/நட்சத்திரத்தின்

மேற்பரப்பில் இருந்து 6.1 மில்லியன் கிலோ மீட்டர் தூர வரம்பிற்குள் நெருங்கியுள்ளது.

- இது ஒரு ஆய்வுக் கருவி சூரியனுக்கு மிக அருகில் நெருங்கிய குறுகிய தூரம் ஆகும் என்பதோடு எந்தவொரு விண்கலமும் இவ்வளவு நெருக்கமாக சூரியனை நெருங்கியது இல்லை.
- பார்க்கர் சூரிய ஆய்வுக் கலமானது இந்த இடத்தினை நெருங்குவதற்கு ஏழு ஆண்டுகள் ஆனது.
- இஸ்ரோவின் ஆதித்யா-L1 என்ற ஆய்வுக் கருவியானது, சூரியனிலிருந்து சுமாராக 150 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் நிலை நிறுத்தப் பட்டது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவில் சிங்கத்தின் IUCN பாதுகாப்பு நிலை





- IUCN அமைப்பானது, சிங்கத்திற்கான (பாந்தெரா லியோ) முதல் பசுமை நிலை குறித்த மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்த இனம் ஆனது, 'அதிக எண்ணிக்கையில் குறைந்து போன இனம்' என்று இதில் தர

வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

- இந்தப் புதிய மதிப்பீட்டுக் கருவி ஆனது, எண்ணிக்கை மிக முழுமையாக மீட்கப்பட்ட இனம், எண்ணிக்கையில் சற்று குறைந்த இனம், நடுத்தர எண்ணிக்கையில் குறைந்த இனம், அதிக எண்ணிக்கையில் குறைந்த ஒரு இனம், மிகவும் அதிக எண்ணிக்கையில் குறைந்த இனம், காடுகளில் அழிந்து விட்ட இனம் மற்றும் தீர்மானிக்க முடியாத ஒரு எண்ணிக்கை என ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- சிங்கங்கள் முன்னர் ஆப்பிரிக்கச் சிங்கம் (பாந்தெரா லியோ லியோ) மற்றும் ஆசிய சிங்கம் (பாந்தெரா லியோ பெர்சிகா) என இரண்டு கிளையினங்களாக விவரிக்கப் பட்டன.
- IUCN SSC பெரும்பூனை இனங்கள் நிபுணர் குழுவானது தற்போது சிங்கங்களை
    - பாந்தெரா லியோ லியோ (மத்திய ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் காணப்படுகிறது) மற்றும்
    - பாந்தெரா லியோ மெலனோசையாட்டா (தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் காணப்படுகிறது) எனப் பிரிக்கிறது.

## பூஞ்சைகள் மற்றும் குங்கிலியம் மர இனங்களுக்கு அச்சுறுத்தல்கள்







- குங்கிலியம் மரங்களின் அருகி வரும் நிலை மற்றும் அதன் பூஞ்சை அழிவு போன்ற சில அச்சுறுத்தல்களை IUCN அடையாளம் கண்டுள்ளது.
- தற்போது சுமார் 1,000க்கும் மேற்பட்ட பூஞ்சை இனங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தற்போது சுமார் 169,420 இனங்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் 47,187 அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன.
- பூஞ்சைகள் ஆனது விலங்குகள் மற்றும் தாவரங்களிலிருந்து மிக வேறுபட்ட அவற்றின் சொந்தப் பிரிவினை/பேரின வகையினைக் கொண்டுள்ளன.
- மதிப்பிடப்பட்ட சுமார் 2.5 மில்லியன் இனங்களுடன் விலங்குகளுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய பேரினத்தினைக் கொண்டுள்ளன என்பதோடு அவற்றில் சுமார் 155,000 இனங்கள் பெயரிடப்பட்டுள்ளன.
- பரங்கிச் சாம்பிராணி (போஸ்வெல்லியா) மரங்களில் மிகவும் ஐந்து முக்கிய இனங்கள் உள்ளன என்பதோடு அவற்றில் இருந்து தான் குங்கிலியம்/பிராங்கின்சென்ஸ் பெறப் படுகிறது.

- இதில் நறுமணக் குங்கிலியம் ஆனது, பல நூற்றாண்டுகளாக வாசனைத் திரவியங்கள், தூபங்கள் மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.
- அவற்றுள் B. செராட்டா (இந்தியப் பிராங்கின்சென்ஸ்), B. கார்டெரி மற்றும் B. சாக்ரா ஆகியவை மிகவும் பிரபலமானவையாகும்.
- இந்த இனங்களின் IUCN பாதுகாப்பு நிலை புதுப்பிக்கப்பட்டுள்ளது:
    - ஏமன் நாட்டின் சோகோட்ரா என்ற தீவில் உள்ள 5 வகையான பிராங்கின்சென்ஸ் (போஸ்வெல்லியா), எளிதில் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இருந்து அருகி வரும் நிலைக்கு மாற்றப்பட்டுள்ளன,
    - ஒரு இனம் மிக எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்து மிக அருகி வரும் நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. மற்றும்
    - 3 இனங்கள் மிக முதல் முறையாக மிக அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாக மதிப்பிடப் பட்டுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## USCIRF வருடாந்திர அறிக்கை 2025







- சர்வதேசச் சமய சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் (USCIRF) ஆனது, சமீபத்தில் அதன் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மதச் சுதந்திர மீறல்கள் காரணமாக இந்தியாவை "குறிப்பிடத் தக்க வகையில் கவலை கொள்ள வைக்கும் நாடு" (CPC) என்று நியமிக்க இது பரிந்துரைக்கிறது.
- ஆயுத ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 36வது பிரிவின் கீழ் இந்தியாவிற்கு மேற் கொள்ளப் படும் MQ-9B ஆளில்லா விமானங்கள் போன்ற ஆயுதங்களின் விற்பனையை மறுபரிசீலனை செய்யவும் அமெரிக்க அரசாங்கத்திற்கு இது பரிந்துரைத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில், 12 மாநிலங்கள் ஏற்கனவே உள்ள மதமாற்ற எதிர்ப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்த அல்லது நன்கு வலுப்படுத்த முயற்சித்தன.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், "குஜராத் மாநில அரசு ஆனது, புத்த மதம், சீக்கியம் அல்லது சமண மதத்திற்கு என மாற விரும்பும் இந்துக்கள் தங்கள் மாவட்ட ஆட்சியர் அதிகாரியிடமிருந்து அதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும் என்று வலியுறுத்தும் ஒரு

சுற்றறிக்கையினை வெளியிட்டது".

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## CGRFA 20 – ரோம்

- உணவு மற்றும் வேளாண்மைக்கான மரபணு வளங்கள் ஆணையத்தின் (CGRFA-20) 20வது கூட்டம் ஆனது ரோம் நகரில் நடைபெற்றது.
- உணவு மற்றும் வேளாண்மைக்கான உலகின் தாவர மரபணு வளங்களின் நிலைமை குறித்த மூன்றாவது அறிக்கையும், உலகின் வன மரபணு வளங்களின் நிலை குறித்த இரண்டாவது அறிக்கையும் இந்த நிகழ்வின் போது வெளியிடப் பட்டன.
- தாவர மரபணு வளங்கள் மீதான அறிக்கையானது உலகளாவியப் போக்குகள், வளங் காப்பு முயற்சிகள் மற்றும் பயிர்ப் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதில் உள்ள பல சவால்கள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.
- உலகின் வன மரபணு வளங்கள் ஆனது, உலகளவில் வனப் பல்லுயிர்ப் பெருக்கத்தின் நிலையை மதிப்பிடுகின்றன.
- இது நிலையான ஒரு வன மேலாண்மை மற்றும் பருவநிலைத் தகவமைப்பில் மரபணு பன்முகத் தன்மையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.





# இதரச் செய்திகள்

## டைர்செபடைடு மருந்து

- மிகவும் மேம்பட்ட எடை குறைப்பு மருந்துகளில் ஒன்றான மௌஞ்சாரோ, அமெரிக்க மருந்தக நிறுவனமான எலி லில்லியால் இந்தியாவில் விற்கப்பட உள்ளது.
- மௌஞ்சாரோவில் டைர்செபடைடு எனப்படும் ஒரு தீவிர மூலக்கூறு உள்ளது.
- இது இரத்தத்தில் சர்க்கரையை ஒழுங்குபடுத்தும் இன்சுலின் சுரப்பை மிகவும் நன்கு மேம்படுத்துவதற்காக வேண்டி, குளுகோகனின் சுரப்பைத் தடுக்கும், சில குடல் ஹார்மோன்களின் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- இது இரத்தத்தில் சர்க்கரையின் அளவினைக் குறைத்து எடை குறைப்பை மேம்படுத்த

குளுகோகன் போன்ற பெப்டைட்-1 (GLP-1) மற்றும் குளுக்கோஸ் சார்ந்த இன்சுலினோட்ரோபிக் பாலிபெப்டைட் (GIP) ஆகிய இரண்டு ஹார்மோன்களைப் பிரதிபலிக்கிறது.

- டைர்செபடைடு ஆனது, சரியான உணவைப் பின்பற்றினாலும் மற்ற சில மருந்துகளை எடுத்துக் கொண்டாலும் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவினைக் கட்டுப்படுத்த முடியாத இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★